ஸ்ரீ லக்ஷ்மி பிக்சர்ஸ்
மக்களைப் பெற்ற
மகராசி
விலை 0-1-0
S. Nataraj.
Distributors
EEYAR FILMS PRIVATE LTD.

நடிகர்கள்

★

சிவாஜி கணேசன்	...	செங்கோடன்
கே. சாரங்கபாணி	...	முனியாண்டி
வி. கே. ராமசாமி	...	பண்ணையார்
எம். என். நம்பியார்	...	கண்ணன்
வி. எம். ஏழுமலை	...	பவளமலை
பி. டி. சம்பந்தம்	...	காடுவெட்டி
ஈ. ஆர். சகாதேவன்	....	மாயாண்டி
எஸ். வி. ராஜகோபால்	...	ஹெட்கான்ஸ்டேபிள்
சந்தானம்	....	தலையாரி, தருமலிங்கம்

நடிகைகள்

★

பி. பானுமதி	....	ரங்கம்மா
பி. கண்ணாம்பா	...	அங்கம்மா
எம். என். ராஜம்	...	தங்கம்
டி. பி. முத்துலக்ஷ்மி	...	பாவாயி
சி. டி. ராஜகாந்தம்	...	அகிலாண்டம்

மற்றும் பலர்.

பின்னணி பாடியவர்கள்:

டி. எம். சௌந்திரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், எஸ். ஸி. கிருஷ்ணன், பி பி. ஸ்ரீனிவாஸ், ஜிக்கி, ரத்னமாலா, சரோஜினி (உடுகா), ஏ. பி. கோமளா, ஜமுனாராணி முதலியோர்

★

ஸ்டுடியோ :

பிலிம் சென்டர்

மக்களைப் பெற்ற மகராசி

கதைச் சுருக்கம்.

பண்ணையார் சங்கிலியப்பன் குடும்பத்திற்கும், அதே கிராமத்தில் வசித்து வந்த அவர் சகோதரி அங்கம்மாள் மகன் செங்கோடன் குடும்பத்திற்கும் வெகு நாட்களாக பகைமை இருந்து வந்தது. அதற்கு நேரிடையாக சென்னைக் கல்லூரியில் படித்து வந்த பண்ணையாரின் மகன் கண்ணனுக்கும், அதே கல்லூரியில் படித்து வந்த செங்கோடனின் தங்கை தங்கத்திற்கும் காதல் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வந்தது. இருவரின் கல்லூரிப் படிப்பு முடிந்ததும் வீடு திரும்புகிறார்கள். மகனை வரவேற்க பண்ணையாரும், தங்கையை வரவேற்க செங்கோடனும் ரயிலடிக்குச் செல்கிறார்கள்.

முனியாண்டியின் மகள் ரங்கம்மா வண்டி ஓட்டிக் கொண்டு வரும்பொழுது பவளமலையுடன் வம்பு பேசிக் கொண்டு நடுப்பாதையில் சென்று கொண்டிருக்கும் செங்கோடனை வழிவிடும்படி வற்புறுத்த, ரங்கம்மாவிற்கும் செங்கோடனுக்கும் வாக்குவாதம் வலுக்க, பவளமலை செங்கோடனைச் சமாதானப்படுத்தி அழைத்துச் செல்கிறான்.

கண்ணனும் தங்கமும் ஒரே பெட்டியிலிருந்து இறங்குவதைக் கண்ட பண்ணையாரும், செங்கோடனும், ஆச்சரியப்படுகிறார்கள். பண்ணையார் மகனை கண்டிக்கிறார். செங்கோடன் தங்கைக்குப் புத்தி சொல்லுகிறான். தம்பதிகளாக வேண்டுமென்று வந்த காதலர்களிருவரும் அங்கு பகைமையும் கட்டுப்பாடும் அதிகரித்திருப்பதைக் கண்டு மனமுடைந்து பேசிக்கொண்டிருக்கும் சமயம், செங்கோடன் குறுக்கிட்டுத் தன் தங்கையை இழுத்துக்

கொண்டு போய் தாய் முன் நிறுத்தி, தாறுமாருகப் பேசு கிருன். மகளைப் பேசுவதை சகியாத தாய் தன்னையும் மறந்து மகனை அடித்து விடுகிருள். வருத்தமடைந்த செங்கோடன் வீட்டைவிட்டு வெளியேறி முனியாண்டி-வீடு செல்கிருன்.

முனியாண்டியின் மருமகனை மாயாண்டி ரங்கம்மாவைத் தனக்கு மண முடிக்கவேண்டுமென்று மிரட்டிக் கொண்டிருக்க, செங்கோடன் குறுக்கிட்டு மாயாண்டியை வெளியேற்றுகிருன். தன்னுடன் வம்பு செய்த ரங்கம்மா முனியாண்டியின் மகள் என்பதையறிந்து தவறுதலாக நடந்து கொண்டதற்கு இருவரும் ஒருவருக்கொருவர் மன்னிப்புக்கேட்டுக் கொள்கின்றனர். இருவர் உள்ளத்திலும் அன்பு தோன்றி காதலாக மாறுகிறது.

நேரில் சந்திக்க இயலாத கண்ணனும், தங்கமும் கடிதம் மூலம் எழுதி, தெப்பக்கரை மண்டபத்தில் சந்திக்க திட்டமிட்டிருந்தார்கள் இந்த ரகசிய திட்டத்தை பண்ணையாரும், செங்கோடனும் அறிந்து தங்கத்தை தக்க காவலில் வைத்து விட்டு கண்ணனுக்கு புத்தி புகட்ட தெப்பக்கரை மண்டபத்திற்கு விரைகிருர்கள். அங்கு காதலர்களுக்குப் பதில் விரோதிகள் சந்திக்கின்றனர். சச்சரவு முற்றுகிறது. மாயாண்டி குறுக்கிடுகிருன்.

செங்கோடன் தன் விஷயத்தில் அடிக்கடி தலையிடு வதைக் கண்ட மாயாண்டி பண்ணையாரைத் தன் வசப் படுத்திக் கொண்டு செங்கோடனைத் தீர்த்துக்கட்டி விட ஏற்பாடுகள் செய்கிருன்.

தங்கம்–கண்ணனின் காதலின் முடிவு?
ரங்கம்மாவை செங்கோடன் அடைந்தாளு?
மாயாண்டியின் சூழ்ச்சி நிறைவேறிற்ரு?
இவைகளின் முடிவை திரையில் காண்க.

மக்களைப் பெற்ற மகராசி

பாட்டுகள்

இயற்றியவர்:
அ. மருதகாசி

பாடியவர்:
சீர்காழி கோவிந்தராஜன்

மக்களைப் பெற்ற மகராசி
மஹா லெட்சுமி போல் விளங்கும் முகராசி—நல்ல (ம)

மண்ணையும் பொன்னாக்கும் கைராசி—என்றும்
வழங்கிடும் அளவிலா திரவியராசி (ம)

ஒற்றுமையை வளர்க்கும் இனராசி—இந்த
உத்தமியின் இனிய குண ராசி—அன்பின்
உருவான அன்னையின் புகழ்பேசி வணங்கி
உலகினில் பெறுவோம் நல்லாசி. (ம)

○

இயற்றியவர்:
அ. மருதகாசி

பாடியவர்:
சௌந்திரராஜன்

தொகையறா

செங். — பொன்னு வெளையிற பூமியடா—வெவசாயத்தே
பொறுப்பா கவனிச்சு செய்யிறோமடா
உண்மையா உழைக்கிற நமக்கு—எல்லா
நன்மைகளும் நாடிவந்து கூடுதடா.

பாட்டு.

மணப்பாரை மாடுகட்டி மாயவரம் ஏருபூட்டி
வயக்காட்டை உழுதுபோடு சின்னக்கண்ணு—பசுந்
தழையெப் போட்டுப் பாடுபடு செல்லக்கண்ணு

ஆத்தூரு கிச்சடிச்சம்பா
பாத்துவாங்கி வெதை வெதச்சு
நாத்தை பறிச்சு நட்டுப்போடு சின்னக்கண்ணு - தண்ணியெ
ஏத்தம் புடிச்சு எறைச்சுப்போடு செல்லக்கண்ணு—

கருதெ நல்லா வெளிய வச்சு
மருதெ சில்லா ஆளெவச்சு
அறுத்துப்போடு களத்து மேட்டிலே சின்னக்கண்ணு
— நல்லா
அடிச்சுத்தூத்தி அளந்து போடு செல்லக்கண்ணு

பொதியெ ஏத்தி வண்டியிலே
பொள்ளாச்சி சந்தையிலே
விருதுநகர் வியாபாரிக்கு சின்னக்கண்ணு—நீயும்
வித்துப் போட்டு பணத்தெ எண்ணு செல்லக்கண்ணு

சேத்த பணத்தெ சிக்கனமா
செலவு பண்ண பக்குவமா
அம்மாகையிலே கொடுத்துப்போடு சின்னக்கண்ணு
— அவுங்க
ஆறைநூறு ஆக்குவாங்க செல்லக்கண்ணு

○

இயற்றியவர்:
அ. மருதகாசி.

பாடியவர்கள்:
எஸ். சி. கிருஷ்ணன்
ரத்னமாலா, முதலியோர்

சீமைக்குப் போயி படிச்சவரு
சின்ன எஜமான் நல்லவரு (சீமை)

சீவிக்கிட்டு ஜிலுஜிலுன்னு சிங்காரம்பண்ணிக்கிட்டு
காலுசட்டை மேலுசட்டை கச்சிதமா போட்டுக்கிட்டு (சீமை)

ஏழைக்கு துணையா யிருப்பாரு...
இறைமும் நெறைய கொடுப்பாரு...ஆமாம்...ஆமாப்பா.
வாழையடி வாழையாக வந்த நம்ம பண்ணையாரு
வம்பு சண்டை போடமாட்டார், வந்த சண்டை விடமாட்டார்
உம் .... போடு ..... (சீமை)

பணமிருக்கு ஐயா கிட்டே
குணமிருக்கு ஆமா...ஆமா

பலமிருக்கு ஐயா கிட்டே
நெலமிருக்கு...ஆமா.. ஆமா

அறிவிருக்கு ஐயா கிட்டே
அழகிருக்கு...ஆமா...ஆமா

நெறியிருக்கு ஐயா கிட்டே
நெசமிருக்கு...ஆமா...ஆமா
நயமிருக்கு ஐயா கிட்டே
ஜெயமிருக்கு...ஆமா...ஆமா
பயமிருக்கு ஐயா கிட்டே
பவுரிருக்கு (சீமை)

○

கோரஸ். ஹாரத்தி பாட்டு

இயற்றியவர்: பாடியவர்கள்:

அ. மருதகாசி. ரத்னமாலா, A. P. கோமளா } முதலியோர்

செந்தாழம் பூவைப் போல
சிங்காரச் சிட்டுப் போல
வந்தாயே கையை வீசி
தங்கமே—தங்கம்
மஹாலக்ஷிமி நீயே எங்க
தங்கமே தங்கம்

மகராசி உங்க அம்மா
விவசாயி உங்க அண்ணன்
மனசு குளிர படிச்சி வந்த
தங்கமே—தங்கம்
மஹாலக்ஷிமி நீயே எங்க
தங்கமே தங்கம். (செந்தாழம்)

○

இயற்றியவர்: பாடியவர்:

அ. மருதகாசி பி. பானுமதி

சொன்ன பேச்சை கேக்கணும்
முன்னும் பின்னும் பாக்கணும்
நிண்ணு நல்லா நிமிந்து பாத்து
நேர்வழியே நடக்கணும்

அதையும் இதையும் எண்ணிக்கிட்டு
அங்குட்டும் இங்குட்டும் பாத்துக்கிட்டு
அன்ன நடை போடக்கூடாது — பாதையிலே
அன்ன நடை போடக்கூடாது

அவசரத்தில் தலை தெறிக்க
குறுக்கும் நெடுக்கும் பாஞ்சு ஓடி
ஆபத்தை வெலைக்கு வாங்கக்கூடாது—நீங்க (சொன்ன)

கட்டுப்பாட்டை விட்டுப் புட்டு
கண்டபடி கத்திக்கிட்டு
கடமையிலே தவறக்கூடாது—நம்முடைய
கடமையிலே தவறக் கூடாது

காதில் எல்லாம் வாங்கிக்கிட்டு
காத்து வாக்கில் பறக்கவிட்டு
பாதையில் வழுக்கி விழக்கூடாது—போகும்
பாதையில் வழுக்கி விழக்கூடாது (சொன்ன)

○

இயற்றியவர்:
அ. மருதகாசி

பாடியவர்:
பி. பானுமதி

வந்தது யாருண்ணு உனக்குத் தெரியுமா?
சொந்தமுள்ள மச்சாண்ணு சொன்ணுப் புரியுமா?

மச்சாண்ணு தெரிஞ்சதும் வெக்கமாயிருக்குது
மனசு இப்போ எதைஎதையோ நெனைச்சு சிரிக்குது.

அச்சு சேர்த்து வச்சது போல்
பசரிசிப் பல்லழகன்

அரும்பு மீசை குறும்புக்காரன்
ஆளை மயக்கும் சொல்லழகன்

சிங்காரக் கட்டழகன்
செந்தூரப் பொட்டழகன்
கட்டழகன் பொட்டழகன் கண்ணழகன்...ஹகும் ஹாம்.

— அந்த சர்க்கோசுல்லாம் நம்மகிட்டே பேசாதே
அப்படீண்ணு —

வம்பு பேசி என் மனசை
வசியம் செய்த ஆணழகன் — (வந்தது)

○

இயற்றியவர்: பாடியவர்கள்:

கவி. கா. மு. ஷெரீப் { ஸ்ரீமதி. சரோஜினி (உடுதா) / ஸ்ரீ. P. R. ஸ்ரீனிவாஸாச்சாரி

தங்: ஒன்று சேர்ந்த அன்பு மாறுமா
உண்மைக் காதல் மாறிப்போகுமா (ஒன்று)

கண்: ஒன்று சேர்ந்த அன்பு மாறுமா
உண்மைக்காதல் மாறிப்போகுமா (ஒன்று)

தங்: முன்னாளிலே கொண்ட பொல்லாப்பிலே
இன்னாளிலே காதல் மண்ணாவதோ

கண்: சொந்தம் எண்ணியே வாழ்வில் கொண்டோம் காதலே
என்னுசை தங்கமே நேசம் மாறுமா

தங்: பகையாலே காதலே அழியாது கண்ணா

கண்: பண்போடு நாமே இன்பம் காணுவோம் நாளுமே-
பாரிலே — (ஒன்று

கண்: என்னுவியே கண்ணே உன்போலவே
மண்மீதிலே வேறு பெண்ணேதம்மா

தங்: இன்பம் மேவுதே உந்தன் சொல்லால் நெஞ்சிலே
என்னுசை கண்ணா நீ யென் தெய்வமே

கண்: அழியாத அன்பிலே இணைந்தோமே ஒன்றாய்

தங்: பண்போடு நாமே இன்பம் காணுவோம் நாளுமே-
பாரிலே

தங்: } ஒன்று சேர்ந்த அன்பு மாறுமா
கண்: } உண்மைக் காதல் மாறிப் போகுமா. — (ஒன்று)

○

இயற்றியவர்: பாடியவர்கள்:

தஞ்சை: ராமையாதாஸ் { ரத்னமாலா / எஸ். சி. கிருஷ்ணன்.

பவள: அடி தாராபுரம் தாம்பரம் - ஒந்
தலையிலே கனகாம்பரம்

பாவா: அட ஏகாம்பரம் சிதம்பரம் - ஒன்
இடுப்பிலே பீதாம்பரம்

பவள: கண்ஜாடையாலே தவிக்கிறேம் - ஒன்
வாடையாலே மலைக்கிறேம்

பாவா: கட்டாயமா கண்ணையும் காதையும்
கட்ட வண்டியிலனுப்புறேம்

பவள: உம் ....

பாவா: காதலை கட்டவண்டியிலனுப்புறோம் அடி தாராபுரம்
பவள: மனசுக்குள்ளே அடக்கி வச்சி
மாசக்கணக்கா மழுப்புறோம்
பாவா: நீ மறந்துப் புட்டு தூங்கினாலும்
மம்முட்டியாலே எழுப்புறோம்
பவள: பவுசைப் பாத்து பந்து போல
பாஞ்சி பாஞ்சி குதிக்கிறோம்
பாவா: ஒம் பப்பாளிப்பழம் தலையை வாங்க
சமயம் பாத்து நிக்கிறோம். — அடி தாராபுரம்
பவள: ஆளில்லாமெ வெம்புறோம்
பாவா: இது - நூலில்லாத பம்பரம்
பவள: அட, நாட்டுப்புறம்
பாவா: சீ...காட்டுப்புறம்
பவள: சே, சே மோட்டுப்புறம்
பாவா: அப்புறம்......
பவள: த்சு .... ஆ — அடி தாராபுரம்

○

இயற்றியவர்:
தஞ்சை. ராமையாதாஸ்

பாடியவர்கள்:
பி. பானுமதி
T. M. சௌந்தரராஜன்

தொகையரு

செங்: கையிலே வளவி எல்லாம்
கல கலன்னு ஆடையிலே — ஒங்
காலிலே கொலுசு ரெண்டும்
ஜதி தாளம் போடையிலே
கஞ்சி பானை தூக்கி கிட்டு
கண்டும் காணாமே சுண்டு நடை போட்டுகிட்டு

பாட்டு

போறவளே போறவளே
பொன்னுரங்கம் — என்னை
புரிஞ்சிக்காமெ போறியே நீ
சின்னரங்கம்.

தொகையரு

ரங்: காடு வயலை படைச்சி
கலப்பையை ஏம் படைச்சான் — இந்த

கன்னி பொண்ணையும் படைச்சி — ஒங்
கண்ணை ரெண்டயும் ஏம்படைச்சான்
நேச மச்சான்
சொல்லு மச்சான்

வசனம்:

என்ன மச்சான் அப்படி
பாக்கறீங்க

ரங்: ஏரு ஓட்டி ஜோரு காட்டும்
ஆசைமச்சான் — மச்சான்
யாரு ஒன்னை தாறு மாறு
பேசவச்சான் — மச்சான்.

செங்: தாறு மாறு பேசவல்லே
பொன்னுரங்கம் — ரங்கம்
பொன்னுரங்கம் — கஞ்சி
ஆறி போனு புடிக்குமா — என்
சின்னரங்கம் — ரங்கம்

ரங்: ஆறி போனு போகட்டும் — என்
ஆசைமச்சான் — மச்சான்
ஆசைமச்சான் — கஞ்சி
அப்பனுக்கு கொண்டு போறேன்
அருமை மச்சான் — மச்சான்

செங்: தன்னந்தனியா போறியே — எம்
பொன்னுரங்கம்

ரங்: போனல் — தைரியமா திரும்பி வருவா
சின்னரங்கம்

செங்: மண்ணை நம்பி மரமிருக்கேன்
பொன்னுரங்கம்

ரங்: அந்த — மரத்து நெழலில் குடியிருப்பா
சின்னரங்கம்

செங்: போறவளே போறவளே
பொன்னுரங்கம் — இன்னும்
புரிஞ்சிக்காமே போறியே நீ
சின்னரங்கம்

இயற்றியது. பாடியவர்கள்:
பட்டுக்கோட்டை, கல்யாணசுந்தரம் ஜிக்கி, ஜமுனாராணி, ரத்னமாலா

ரோஜா: ஓ ...... மல்லியக்கா!

மல்லி: ஏண்டி ரோஜா அக்கா!

ரோஜா: மல்லியக்கா மல்லியக்கா எங்கே போறே? கொஞ்சம்
சொல்லுடியக்கா எதுக்கு இப்படி குலுக்கி நடக்குறே?

மல்லி: நான் மணவறையெ சிங்காரிச்சு
வாசனையை அள்ளித் தெளிச்சு
வாரவங்க எல்லாரையும் மயக்கப்போறேன்—புது
மணப் பெண்ணு கூந்தலுலே மணக்கப் போறேன்!

ரோஜா: நீ மணப் பொண்ணு தலையில் மட்டும் மணக்கப் [போறே!
நான் மாப்பிள்ளை கழுத்தைச் சுத்தி தொங்கப் [போறேன்!
நீ வாசனையெ கொடுத்துப்பிட்டு வதங்கப்போறே!
நான் வாரவங்க கையில் எல்லாம் குலுங்கப் [போறேன்!

அடி தந்தனத்தானா தந்தனத்தானா
சரக்கிது தானா
ஒன் தரத்துக்கும் உடல் நெரத்துக்கும் நான்
கொறெஞ்சுப் போனேனா?

மல்லி: கள்ளமில்லா மனசுக் கென்னே உவமை [சொல்வாங்க பெரும்
கவிஞரெல்லாம் காவியத்தில் இடங் கொடுப்பாங்க!
காத்தடிச்சா போதும் என்னைக் காணத் துடிப்பாங்க [—ஒன்னே
கண்டாக்கூட முள்ளெ நெனச்சு முகஞ்சுளிப்பாங்க

அடி தந்தனத்தானா தந்தனத்தானா
சரக்கிது தானா? — ஒன்
தரத்துக்கும் உள்ள குணத்துக்கும் நான்
கொறெஞ்சுப் போனேனா?

ரோஜா: நீ மலருமுன்னே கடைக்கு வந்து மலிஞ்சிப் [போறவ!

மல்லி: நீ உலருமுன்னே தொட்டாக்கூட உதுந்துப் [போறவ!

ரோஜா: நீ வளரும் போதே கொம்பைத் தேடிப் புடிச்சவ!

மல்லி: அதுக்கு வகையில்லாமெ தனிச்சு நிண்ணு தவிச்சவ!

அடி தந்தனத்தாளு தந்தனத்தாளு
சரக்கிது தாளு? ஒன்
தரத்துக்கும் உள்ள குணத்துக்கும் நான்
கொறெஞ்சுப் போனேனு?

— தாமரை வருதல் —

மல்லி: தங்கச்சி, தங்கச்சி
தாமரை தங்கச்சி!
எங்களுக்குள்ளே எவதான் சிறந்தவ
எடுத்துச் சொல்லுடி தங்கச்சி!

தாமரை: உலகில் சிறந்தது என்ன?

மல்லி: அன்பு உள்ளவர் செய்திடும் தானம்!

தாமரை: அந்த தானத்தில் சிறந்தது என்ன?

ரோஜா: நல்ல தன்மை வளர்க்கும் நிதானம்!

தாமரை: அதிலும் சிறந்தது என்ன?

மல்லி: பல அஹிம்சா மூர்த்திகள் ஆராய்ந்து சொன்ன
உலக சமாதானம்!

தாமரை: அதை நாம்-உணர்ந்து நடக்கவேணும்-நமக்குள்
ஒற்றுமை வளர்க்க வேணும்-அப்போதான்
உலவும் சமாதானம்-எங்கும்
நிலவும் சமாதானம்!

தயாரிப்பு:
வி. கே. ராமசாமி - ஏ. பி. நாகராஜன்

கதை-வசனம்:
ஏ. பி. நாகராஜன்

சங்கீதம்:
கே. வி. மஹாதேவன்

பாடல்கள்:
அ. மருதகாசி, தஞ்சை ராமையாதாஸ்,
கவி. காமு ஷரீப்

டைரக்ஷன் : கே. சோமு

உதவி டைரக்ஷன்	...	கே. கே. சம்பத்குமார்
ஒளிப்பதிவு	...	வி. கே. கோபால்
உதவி	...	டி. வி. பாலசுந்தரம், பாபுசேட் குல்கர்னி
எலக்ட்ரீஷியன்	...	ராமச்சந்திரன்
ஒலிப்பதிவு	...	C. P. கன்னியப்பன் [பிலிம் சென்டர்] P. V. கோடீஸ்வர ராவ் [பரணி] A. T. நாருயண் [பரணி]
உதவி	...	பிரான்ஸிஸ், ஏ. சாமி K. பார்த்தசாரதி மூஸா இப்ராஹிம்
எடிட்டிங்	...	T. விஜயரங்கம்
உதவி	...	துரைராஜ்
ஆர்ட் டைரக்டர்	...	பிரசாத் ராவ்
செட்டிங்ஸ்	...	பெருமாள்ராஜு
ஆர்டிஸ்ட்	...	V. ராமலிங்கம்
லாபரட்ரி	...	பால் ஜி ஸிந்தே ஈஸ்வர் சிங்
உதவி	...	ஸ்யாம் வால்கே B. Sc. நாருயணன், அமோன்கீர்
மேக்கப்	...	கஜபதி
உதவி	...	கைலாசம், கோபால்
டைலர்	...	கண்ணன்
உடையலங்காரம்	...	C. K. ஹரி
நடனம் & ஸ்டண்ட்	...	வி. பி. பலராம்
ப்ரொடக்ஷன் நிர்வாகம்	...	R. வெங்கட்ராமன்
ப்ரொடக்ஷன் உதவி	...	முத்துராமலிங்கம்
ப்ரொடக்ஷன் மானேஜர்	...	எஸ். வி. ராஜகோபால்
உதவி	...	வேணு, சென்னியப்பன்

விரைவில் எதிர்பாருங்கள்!

(திருச்சி, தஞ்சை, ஜில்லாக்களுக்கு)

யார் பையன்

ஜெமினி கணேசன் — சாவித்திரி

பூலோக ரம்பை

ஜெமினி கணேசன் — அஞ்சலிதேவி

பாக்தாத் திருடன்

M. G. ராமச்சந்திரன் — வைஜயந்திமாலா

பொம்மைக் கல்யாணம்

சிவாஜி கணேசன் — ஜமுனா

பெண்பாவம் பொல்லாது

சிவாஜி கணேசன் — சாவித்திரி

நீலமலைத் திருடன்

ரஞ்சன் — அஞ்சலிதேவி

M. A. V. பிக்சர்சாரின்
சம்பூர்ண இராமாயணம்

★

கலை அரசி

M. G. ராமச்சந்திரன் — பானுமதி

(Trichy, Tanjore & M. R. T.)

மஹாதேவி

M. G. ராமச்சந்திரன் — சாவித்திரி

(M. R. T.)

: விபரங்கட்கு :

வியார் பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட்

H. O. புதுக்கோட்டை. Branch: மதுரை.

செந்தமிழ்ப் பதிப்பகம், புதுக்கோட்டை.